# <u>கம்பம் நகராட்சி</u>

**2022-ஆம் ஆண்டு ஜுன் மாதம் (28.06.2022)-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் சாதாரணக்கூட்டம்**

## <u>கூட்டப்பொருள்</u>

<table>
<tr><td>1)</td><td>நகராட்சி ஆணையாளர் அவர்களின் 04/2022 மற்றும் 05/2022 -ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.</td></tr>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.</td></tr>
<tr><td>2)</td><td>நகராட்சி பொறியாளர் அவர்களின் 04/2022 மற்றும் 05/2022 -ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.</td></tr>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.</td></tr>
<tr><td>3)</td><td>தேனி, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ந.க.எண்.25417/2020/ஜி4, 23.04.2022-ஆம் தேதிய உத்தரவுப்படி, தேனி மாவட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 30.04.2022-ஆம் தேதி வருகையை முன்னிட்டு விழா நடைபெறும் இடத்திற்கு தேவையான அனைத்து விதமான பணிகளுக்கும் சம்மந்தப்பட்ட துறைகள் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் கம்பம் நகராட்சிக்கு விழா நடைபெறும் பகுதிகளில் போதுமான அளவு குடிநீர் வசதிகள், தேவையான கிருமிநாசினிகள் தெளித்து அனைத்து இடங்களையும் சுத்தமாக வைத்தல், ஆங்காங்கே நடமாடும் கழிப்பறைகள் அமைத்தல், எரியாத தெருவிளக்குகள் மற்றும் உடைந்த ஹோல்டர்களை மாற்றி புதிய விளக்குகள் மற்றும் குழல் விளக்குகள், குடிநீர் தொட்டிகள் அமைப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்காணும் பணிகளை செய்தமைக்கு செலவுத் தொகை ரூ.1,46,539/-க்கு தமிழ்நாடு நகராட்சி விதிகளின் 1920 பிரிவு 15-இன்கீழ் வழங்குவதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.</td></tr>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு :<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சி விதிகளின் 1920 பிரிவு 15-இன்கீழ் மேற்காணும் பணி செய்தமைக்கான செலவுத் தொகை ரூ.1,46,539/- ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்குவதை மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>4)</td><td>கம்பம் நகராட்சி வார்டு எண்.3, வாரச்சந்தைக்கு வடக்கு புறத்தில் உள்ள குடியிருப்பு பகுதிகளில் உள்ள சாலையில் மழைநீர் வடிகால் வசதி இல்லாமல் மழைகாலங்களில் சாலையின் ஒரத்தில் மழைநீர் தேங்கி சுகாதார கேடு மற்றும் கட்டிடத்திற்கு சேதாரம் ஏற்படுகிறது. எனவே மேற்காணும் பகுதியில் புதிதாக மழைநீர் வடிகால் கட்டுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,70,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.</td></tr>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு :<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத்தை 2022-2023-ஆம் ஆண்டு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.758/2022/இ1)</td></tr>
<tr><td>5)</td><td>கம்பம் நகராட்சிக்கு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் அனுமதித்துள்ளபடி,2021-2022-ஆம் ஆண்டிற்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத்திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணிகள் செய்திட 11.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>கம்பம் நகராட்சி சாலையோர வியாபாரிகளுக்கு விற்பனை வண்டிகள் விநியோகம் செய்யும் பணி</td><td>79.62</td></tr>
</table>
மேற்காணும் பணிக்கு 11.05.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வலைதளம் வழியாக (Online) ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மேலும், நேரடியாக (Offline) இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி மட்டும் (TechnicalBid) திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ் குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் திட்டப் பணி மேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது.</td></tr>
</table>

தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமுனா (Price Bid) 13.05.2022 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்பட்ட விலைவிகித விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s. S.R. Enterprises. Thuraiyur | மதிப்பீட்டு தொகைக்கு (+) 16.46% அதிகம் |
| 2 | M/s. Dhanshith Trading Agencies, Thiruchirappalli. | மதிப்பீட்டு தொகைக்கு (-) 0.57 % குறைவு |

அலுவலகக்குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.57% சதவிகிதம் குறைவாக வழங்கியுள்ள M/s.Dhanshith Trading Agencies, Thiruchirappalli நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.758/2022/இ1)

6) தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 2021-2022-இன்கீழ் கீழ்கண்ட சமுதாயக்கூடங்கள் ரூ.49.92 இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் செய்திட பார்வை 1-இல் காணும் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.5990/2022/SBM, 11.04.2022-ஆம் தேதிய கடிதத்தின்படி கீழ்கண்ட சமுதாயக் கழிப்பிடங்கள் கட்டும் பணிகள் செய்திட 27.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கம்பம் நகராட்சி வார்டு எண்.14, டாக்டர் அம்பேத்கார் தெருவில் உள்ள நகராட்சி வசூல் மையத்திற்கு அருகில் சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 24.96 |

மேற்கண்ட பணிக்கு 27.05.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வலைதளம் வழியாக (Online) ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. மேலும், நேரடியாக (Offline) இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, தொழில்நுட்ப பட்டியல் மட்டும் (TechnicalBid) 27.05.2022 அன்று திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ் குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் திட்டப் பணி மேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது. தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமுனா (Price Bid) 30.05.2022 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்பட்ட விலைவிகிதம் விவரம் கீழ்கண்டவாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. கே.சி போஸ், ஒப்பந்ததாரர், கம்பம் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 13.84 % அதிகம் |
| 2 | திரு.வி. கிருஷ்ணன், ஒப்பந்ததாரர்,கம்பம் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.86 % குறைவு |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.86 சதவிகிதம் கூடுதலாக வழங்கிய திரு.வி. கிருஷ்ணன், கம்பம் ஒப்பந்ததாரரிடமிருந்து விலைக்குறைப்பு செய்ய கோரியதில், ஒப்பந்ததாரர் மூலப்பொருட்களின் விலை ஏற்றத்தினாலும் பணியாளர்களின் கூடுதல் சம்பள ஏற்றத்தினாலும் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள 4.86 சதவிகித விலை விகிதத்தினை குறைக்க இயலாது என 31.05.2022-ஆம் தேதியில் கடிதம் வழங்கியுள்ளார். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. இதில் 4.86 சதவிகிதம் கூடுதலில் குறைவாக வழங்கியுள்ள திரு.வி கிருஷ்ணன், கம்பம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.751/2022/இ1)

| | |
|---|---|
| 7) | தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 2021-2022-இன்கீழ் கீழ்கண்ட சமுதாயக்கூடங்கள் ரூ.49.92 இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் செய்திட பார்வை 1-இல் காணும் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.5990/2022/SBM, 11.04.2022-ஆம் தேதிய கடிதத்தின்படி கீழ்கண்ட சமுதாயக் கழிப்பிடங்கள் கட்டும் பணிகள் செய்திட 27.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. |

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கம்பம் நகராட்சி வார்டு எண்.3 சங்கிலி நகர் ரிலையன்ஸ் பெட்ரோல் பங்க் பின்புறம் சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 24.96 |

மேற்கண்ட பணிக்கு 27.05.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வலைதளம் வழியாக (Online) ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. மேலும், நேரடியாக (Offline) இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, தொழில்நுட்ப பட்டியல் மட்டும் (TechnicalBid) 27.05.2022 அன்று திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் திட்டப் பணி மேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது. தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமுனா (Price Bid) 30.05.2022 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்பட்ட விலைவிகிதம் விவரம் கீழ்கண்டவாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. கே.சி போஸ், ஒப்பந்ததாரர், கம்பம் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.79 % குறைவு |
| 2 | திரு.வி. கிருஷ்ணன், ஒப்பந்ததாரர்,கம்பம் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 13.33% அதிகம் |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.79 சதவிகிதம் கூடுதலாக வழங்கிய திரு.கே.சி.போஸ் கம்பம் ஒப்பந்ததாரரிடமிருந்து விலைக்குறைப்பு செய்ய கோரியதில், ஒப்பந்ததாரர் மூலப்பொருட்களின் விலை ஏற்றத்தினாலும் பணியாளர்களின் கூடுதல் சம்பள ஏற்றத்தினாலும் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள 4.79 சதவிகித விலை விகிதத்தினை குறைக்க இயலாது என 31.05.2022-ஆம் தேதியில் கடிதம் வழங்கியுள்ளார். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. இதில் 4.79 சதவிகிதம் கூடுதலில் குறைவாக வழங்கியுள்ள திரு..கே.சி.போஸ், கம்பம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்..

(ந.க.எண்.751/2022/இ1)

| | |
|---|---|
| 8) | கம்பம் நகராட்சிக்கு தமிழ்நாடு சட்டமன்ற பேரவை நிதிநிலை அறிக்கை 2021-2022-ஆம் ஆண்டின் அறிக்கை எண்.14 மற்றும் அரசாணை எண் (MS) No.71 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.13.09.2021-இன்படியும், சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.க.எண்.27519-36/2021/பி2, 30.03.2022-ஆம் தேதிய கடிதத்தின்படியும், நமக்கு நாமே திட்டம் 2021-2022-இன்கீழ், கீழ்கண்ட பணிகள் செய்திட 27.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. |

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நந்தகோபாலன் கோவில் மேற்கு தெருவில் உள்ள நகராட்சி ஆலமரத்து பள்ளி கட்டிடத்தில் 2 வகுப்பறைகள் கட்டும் பணிக்கு | 26.00 |

மேற்கண்ட பணிக்கு 27.05.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வலைதளம் வழியாக (Online) ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்படவில்லை. நேரடியாக (Offline) இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இதன் தொழில்நுட்ப பட்டியல் மட்டும் (Technical Bid) 30.05.2022 அன்று திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டது.

| Sl.No | Name of the Bidder | Responsive Details | Remarks |
|---|---|---|---|
| 1 | M/s. A.P. Constructions, Cumbum | Technically Qualified | No |
| 2 | Thiru.A. Sabeer Ali, Cumbum | Technically Qualified | No |

மேற்கண்ட இரண்டு தொழில்நுட்ப பட்டியலும் திட்டப்பணிகள் மேற்கொள்ள தகுதியானதாக இருந்து காரணத்தினால், தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமுனா (Price Bid) 19.05.2022 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில் வரப்பெற்ற விலைவிகிதம் விவரம் கீழ்கண்டவாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s. A.P. Constructions, Cumbum | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.73 % குறைவு |
| 2 | Thiru.A. Sabeer Ali, Cumbum | மதிப்பீட்டு தொகைக்கு (+) 7.49 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.74 சதவிகிதம் கூடுதலாக M/s. A.P. Constructions, Cumbum நிறுவனத்தால் விலைவிகிதம் வழங்கிய நிலையில் விலைக்குறைப்பு செய்ய கோரியதில் ஒப்பந்த நிறுவனத்தால் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்திலிருந்து 4.73 சதவிகிதத்தில் மட்டுமே பணியினை மேற்கொள்ள இயலும் எனத் தெரிவித்து 27.05.2022-ஆம் தேதியில் கடிதம் வழங்கியுள்ளார்கள். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதலில் குறைவாகவும், மதிப்பீட்டை விட 4.73 சதவிகிதம் கூடுதலாக விலைவிகிதம் வழங்கியுள்ள M/s. A.P. Constructions, Cumbum ஒப்பந்தப்புள்ளியை மேற்படி திட்ட பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசியம் கருதி ஒப்பந்த நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட வரும் கூடுதல் செலவினத்திற்கு பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2191/2022/இ1)

9) தேனி, திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் ந.க.எண்.4041/2021/தி6, 18.04.2022, கம்பம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021-2022-இன்கீழ் கம்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15, புலவர் தெருவில் வாவேர் பள்ளிவாசல் பின்புறம் கழிப்பிடம் கட்டும் (வாவேர் பள்ளிவாசலுக்கு சொந்தமான இடமாகும்) பணிகள் செய்திட அனுமதிக்கப்பட்டதன்படி, 27.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ.எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கம்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15, புலவர் தெருவில் வாவேர் பள்ளிவாசல் பின்புறம் கழிப்பிடம் கட்டுதல். (வாவேர் பள்ளிவாசலுக்கு சொந்தமான இடமாகும்) | 15.00 |

மேற்காணும் பணிக்கு 27.05.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வலைதளம் வழியாக (Online) ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. மேலும், நேரடியாக (Offline) இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, தொழில்நுட்ப பட்டியல் மட்டும் (TechnicalBid) 27.05.2022 அன்று திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் திட்டப் பணி மேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது. தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமுனா (Price Bid) 30.05.2022 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்பட்ட விலைவிகிதம் விவரம் கீழ்கண்டவாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள் ஏ.பி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ஓப்பந்ததாரர், கம்பம் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.10 % குறைவு |
| 2 | திரு.ஆர். சபீர்அலி ஒப்பந்ததாரர், கம்பம். | மதிப்பீட்டு தொகைக்கு (+) 5.64 % அதிகம் |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.10 சதவிகிதம் கூடுதலாக வழங்கிய திருவாளர்கள் ஏ.பி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கம்பம் ஒப்பந்ததாரரிடமிருந்து விலைக்குறைப்பு செய்ய கோரியதில், ஒப்பந்ததாரர் மூலப்பொருட்களின் விலை ஏற்றத்தினாலும் பணியாளர்களின் கூடுதல் சம்பள ஏற்றத்தினாலும் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள 4.10 சதவிகித விலை விகிதத்தினை குறைக்க இயலாது என 31.05.2022-ஆம் தேதியில் கடிதம் வழங்கியுள்ளார். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளும் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. இதில் 4.10 சதவிகிதம் கூடுதலில் குறைவாக வழங்கியுள்ள திருவாளர்கள் ஏ.பி. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கம்பம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

10) இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு எண்.டி.எண்.60 Q 2112 வாகனத்திற்கு காப்பீடு காலம் 04.06.2022-ஆம் தேதி முதல் புதுப்பிக்க வேண்டி உள்ளது. மேற்படி வாகனத்திற்கு யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், கம்பம் மூலம் வாகன காப்பீட்டு நிறுவனத்திற்கு காப்பீடு புதுப்பிப்பு கட்டணம் ரூ.13,357/-ஐ செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர, அவசியம் கருதி நகர்மன்றத்தின் முன் அனுமதியை எதிர் நோக்கி மேற்காணும் செலவினத்தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

11) இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.48, நாள்20.05.2022-இல் கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி, கீழ்காணும் திட்டப்பணி மேற்கொள்ள 08.06.2022-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1) | **<u>பொதுநிதி 2022-2023</u>**<br>கம்பம் நகராட்சி அலுவலகக் கட்டிடத்தின் முதல் தளத்தில் அமைந்துள்ள நகர்மன்ற கூட்ட அரங்கம், நகர்மன்றத்தலைவரின் அறை மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களின் கழிப்பறைகளில் புதிதாக வர்ணம் பூச்சு கழிப்பறை கோப்பைகள், தண்ணீர் வசதி போன்ற மேம்பாட்டு பணிகள் மேற்கொள்வதற்கு | 3,80,000/- | M/s. ஏ.பி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | - | 0.23 |
| | | | ஆர்.சபீர்அலி | 1.20 | - |

அலுவலகக்குறிப்பு :
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட M/s. ஏ.பி கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.23 சதவிகிதம் குறைவாக ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.578/2022/இ1)

12) இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.59, நாள்.20.05.2022-இல் கல்விநிதி 2022-2023-இன்கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி, கீழ்காணும் திட்டப்பணி மேற்கொள்ள 08.06.2022-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1) | **<u>கல்விநிதி 2022-2023</u>**<br>வார்டு எண்.12, மொஹைதீன் ஆண்டவர்புரம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியின் தெற்கு பக்கம் உள்ள பழைய கட்டிடத்தின் முதல் தளத்தில் ஆய்வகம் கட்டும் பணிகள் மேற்கொள்வதற்கு | 10,00,000/- | M/s. ஏ.பி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | - | 0.04 |
| | | | ஆர்.சபீர்அலி | 0.08 | - |

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு:<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட M/s. ஏ.பி கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.04 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்2191/2021/இ1) |
| 13) | கம்பம் நகராட்சி கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022-ஆம் ஆண்டின் கீழ் வார்டு 32, நந்தகோபால்சாமி நகர் பகுதியில் ரூ.81.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. 18.06.2022 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆய்வின் போது கம்பம் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன்றத்தலைவர் அவர்களும் பூங்கா அமையவிருக்கும் இடமானது அருகில் உள்ள சாலையை விட மிகவும் தாழ்வாக உள்ளதால் மழைநீர் பூங்காவிற்குள் செல்லாமல் தடுக்கும்படி Well Gravel கொண்டு சாலை மட்டத்திற்கு உயர்த்துமாறு அறிவுறுத்தியதற்கிணங்க மேற்காணும் சாலையை உயர்த்துவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.9,50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு:<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) மேற்காணும் செலவுத்தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்வதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2511/2022/இ1) |
| 14) | கம்பம் நகராட்சி பொறியியல் பிரிவில் அனைத்து பல்வேறு திட்டப்பணிகள் சம்மந்தமாக ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் போது ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் மற்றும் இதர ஏல விளம்பர அறிவிப்புகளை நாளிதழில் விளம்பரம் செய்யப்பட வேண்டும். மேற்காணும் விளம்பரம் செய்யும் பட்சத்தில் அதற்கான செலவுத் தொகையினை அவ்வப்போது நாளிதழ்களுக்கு மன்றத்தின் அனுமதி பெற்று தொகை வழங்குவதற்கு காலதாமதமாகிவிடுகிறது. எனவே காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு 2022-2023-ஆம் ஆண்டிற்கு நாளிதழ்களில் விளம்பரம் செய்வதற்கு விளம்பரக் கட்டணம் உத்தேச தொகை ரூ.10,00,000/-ஐ ( ரூபாய் பத்து இலட்சம்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு:<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) மேற்காணும் செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.136/2022/இ1) |
| 15) | கம்பம் நகராட்சிக்குட்பட்ட கம்பம் நகராட்சிக்கு சொந்தமான சுருளிப்பட்டி சாலையில் உள்ள வேப்பமரத்தினை வெட்டி அப்புறப்படுத்திட உத்தமபாளையம், சார் ஆட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவரின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்.34558/2021/ஜி7, நாள்.07.01.2022 உத்திரவில் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 133 (1) (ஈ)-இன்படி, பொது ஏலம் விட்டு வெட்டி அகற்றிட நகராட்சி ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது.<br>அதன்படி, சுருளிப்பட்டி சாலையில் உள்ள வேப்பமரத்தினை வெட்டி அப்புறப்படுத்த 20.05.2022 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் 2 நபர்கள் பொது ஏல வைப்புத்தொகை செலுத்தி ஏலம் கோரியுள்ளனர். ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை.<br><table><tr><th>வ.எண்.</th><th>ஏலதாரர் பெயர் / முகவரி திருவாளர்கள்</th><th>உயர்ந்தபட்ச பொது ஏலக்கேள்வி ரூ.</th></tr><tr><td>1</td><td>திரு.ஜி. முருகன்<br>வார்டு 28, சுருளிப்பட்டி ரோடு, கம்பம்</td><td>ரூ.3,800/-</td></tr><tr><td>2</td><td>திரு.சி. அருள்ராஜ்<br>ரேஞ்சர் ஆபீஸ் ரோடு,<br>கம்பம்.</td><td>ரூ.3,700/-</td></tr></table>உயர்ந்தபட்ச பொது ஏலக்கேள்வியினை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : பொது ஏலத்தில் திரு.ஜி. முருகன், வார்டு 28, சுக்காங்கல்பட்டி தெரு, கம்பம் என்பவர் கோரிய உயர்ந்தபட்ச ஏல கேள்வியினை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண்.654/2017/இ1) |

| | |
|---|---|
| 16) | இந்நகராட்சிக்கு சொந்தமான அலுவலகக்கட்டிடம், குடிநீர்தேக்கத் தொட்டி வளாகம், கம்பம் குமுளி நெடுஞ்சாலை பகுதிகள், நகர் உட்புற பகுதிகள், ஆடுஅடிக்கும் தொட்டி மற்றும் வாரச்சந்தை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பலன்தரும் மரங்களின் மேல்பலன் அனுபவிக்கும் உரிமத்திற்கு மூன்று இனங்களாக பிரித்து பொதுஏலம் விடப்பட்டிருந்தது. தற்போது வாரச்சந்தை மேம்பாட்டு பணிகள் நடைபெறுவதால் அதில் உள்ள மரங்கள் வெட்டி அகற்றப்படும் நிலையில் கம்பம் நகராட்சி சுருளிப்பட்டி ரோட்டில் கம்பம் நகராட்சி எல்லை வரையுள்ள புளியமரங்கள் புதிதாக சேர்க்கப்படுவதால் 2022-2023-ஆம் ஆண்டு முதல் புதிதாக பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருவது அவசியமாகின்றது. ஏற்கனவே பலன்தரும் மரங்களை அனுபவிக்கும் உரிமம் வழங்கப்பட்ட திரு.ஜி. பழனிவேல் அவர்களின் குத்தகை உரிமத்தினை இரத்து செய்து புதிதாக ஏலம் கோர மன்றம் அனுமதிக்கலாம். |

| வ.எண். | இடம் | புளியமரம் | உலகமரம் | மாமரம் | தென்னை |
|---|---|---|---|---|---|
| 1 | நந்தகோபாலசாமி கோவில் தண்ணீர் தொட்டி | 43 | 36 | 3 | 3 |
| 2 | காந்திநகர் தண்ணீர் தொட்டி | 0 | 0 | 0 | 5 |
| 3 | நகராட்சி அலுவலகம் | 0 | 0 | 0 | 2 |
| 4 | வாரச்சந்தை | 8 | 0 | 0 | 0 |
| 5 | ஆடு அடிக்கும் தொட்டி (ம) ஓடைஓரம் | 2 | 2 | 0 | 4 |
| 6 | கம்பம் குமுளி மெயின் ரோடு | 78 | 0 | 0 | 0 |
| 7 | சுருளிப்பட்டி ரோடு (எல்லை) | 121 | 0 | 0 | 0 |
| 8 | கே.கே.பட்டி ரோடு (கழிப்பிடம் அருகில்) | 1 | 0 | 0 | 0 |
| 9 | புனித மேரிபள்ளி பின்புறம் | 20 | 0 | 0 | 0 |
| | **மொத்தம்** | **273** | **38** | **3** | **14** |

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2020/பி1)

| | |
|---|---|
| 17) | கம்பம் நகராட்சிக்குட்பட்ட சொந்தமான வாரச்சந்தையில் உள்ள (புளியமரம்-2 எண்ணம்) புளியமரத்தினை வெட்டி அப்புறப்படுத்திட உத்தமபாளையம், சார் ஆட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவரின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்.34558/2021/ஜி7, நாள்.07.01.2022 உத்திரவில் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 133 (1) (ஈ)-இன்படி, பொது ஏலம் விட்டு வெட்டி அகற்றிட நகராட்சி ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது. |

அதன்படி, வாரச்சந்தையில் உள்ள (புளியமரம்-2 எண்ணம்) புளிய மரத்தினை வெட்டி அப்புறப்படுத்த 20.05.2022 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் 2 நபர்கள் பொது ஏல வைப்புத்தொகை செலுத்தி ஏலம் கோரியுள்ளனர். ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை.

| வ.எண். | ஏலதாரர் பெயர் / முகவரி திருவாளர்கள் | உயர்ந்தபட்ச பொது ஏலக்கேள்வி ரூ. |
|---|---|---|
| 1 | திரு.டி. முருகேசன் வார்டு 3, குரங்குமாயன் தெரு, கம்பம் | ரூ.5,400/- |
| 2 | திரு.ஏ. ஷேக் பரீத், வார்டு 9, தாத்தப்பன்குளம் 13வது தெரு,கம்பம். | ரூ.5,300/- |

உயர்ந்தபட்ச பொது ஏலக்கேள்வியினை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : பொது ஏலத்தில் திரு.டி. முருகேசன், வார்டு 3, குரங்குமாயன் தெரு, கம்பம் என்பவர் கோரிய உயர்ந்தபட்ச ஏல கேள்வியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.654/2017/இ1)

| | |
|---|---|
| 18) | கம்பம் நகராட்சி வார்டு எண்.10, முகைதீன் ஆண்டவர்புரம் பள்ளி வளாகத்தில் புதிய கட்டிடத்தில் சுங்கம் தெரு, நகராட்சி நடுநிலைப்பள்ளி தற்போது இயங்கி வருகிறது. இதில் 420 மாணவ, மாணவியர் பயில்கின்றனர். 200 ஆண் மாணவர்கள் பயன்படுத்தும் ஆண்கள் கழிப்பிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே, மேற்காணும் கழிப்பிடத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி செலவினத்தை 2022-2023-ஆம் ஆண்டு கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| 19) | 2022-2023-ஆம் ஆண்டு பொதுநிதியின் கீழ், கம்பம் நகராட்சியில் பொறியியல் பிரிவு மற்றும் பொதுப்பிரிவில் இயங்கி வந்த நகல் பெருக்கி (ஜெராக்ஸ்) இயந்திரங்கள் முற்றிலும் பழுதடைந்து இயங்காத நிலையில் இருந்து வருகிறது. இதனை பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் செய்வதற்கு அதிக செலவினம் ஏற்படும் என்பதால் புதிதாக நகல் பெருக்கி (ஜெராக்ஸ்) இயந்திரங்கள்- 2, பிரிண்டர்கள்-2 எண்ணம் மற்றும் தேவையான டோனர்கள் வாங்குவதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். |
| 20) | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை திறம்பட செயல்படுத்திடும் பொருட்டு நிரந்தர துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கை போதிய அளவு இல்லாத காரணத்தினால் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித மூ.மு.எண்.22932/P3/2017, நாள்.17.11.2017-இன்படி போதிய தூய்மைப் பணிக்கான நபர்களை தற்காலிகமாக தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியமர்த்திக் கொள்ள அனுமதி வழங்கப்பட்ட நிலையில் UK Security Service சென்னை என்ற நிறுவனத்திற்கும் மற்றும் Relyon Facility சென்னை என்ற நிறுவனத்திற்கும் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் UK Security Service சென்னை என்ற நிறுவனம் தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு குறித்த காலத்தில் ஊதியம் வழங்காமல் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படும் வண்ணம் நடந்து கொண்டதால் விளக்கம் கோரி கடிதம் (ந.க.எண்.3767/2019/எச்1, நாள்.24.02.2022) வழங்கப்பட்ட நிலையில் உரிய விளக்கம் அளிக்காமல் இருந்து வருவதால் பொது சுகாதாரப் பணிகள் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் மேற்கண்ட UK Security Service சென்னை என்ற நிறுவனத்திற்கு வழங்கிய பணி உத்தரவினை ரத்து செய்தும், மேற்படி நிறுவனம் சப்ளை செய்த எண்ணிக்கையில் 67 நபர்களை பொது சுகாதாரப் பணிகள் பாதிக்காத வண்ணம் நாளது வரை உரியவாறு தூய்மைப்பணிக்கான நபர்களை சப்ளை செய்து பணி மேற்கொண்டு வரும் " Relyon Facility சென்னை " என்ற நிறுவனத்தின் விலை விகிதத்திற்குட்பட்டு " Relyon Facility சென்னை " என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு நிபந்தனைகளுக்கு உட்பட்டும் 01.06.2022 முதல் பணியினை மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு :<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) வெளிக் கொணர்வு மூலம் பணியாளர்களை ஒரே விலை விகிதத்தில் அரசின் கொள்கைப்படி, ந.க.எண்.21787/2021/EA2, 02.10.2021-இன்படி பணியமர்த்த வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் முதன்மை அனுமதி வேண்டி ந.க.எண்.79/2021/எச்1, நாள்.04.10.2021-இன்படி கடிதம் அனுப்பப்பட்ட நிலையில் இதுநாள் வரை அனுமதி பெறப்படாத நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள முடியாத நிலை உள்ளதால் மேற்கண்ட " Relyon Facility சென்னை என்ற நிறுவனம் ஏற்கனவே பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு அனைத்து வகையிலும் பணி பாதுகாப்பு வழங்குவதாக கடிதம் வாயிலாக வழங்கிய உத்திரவாதத்தின் அடிப்படையில் நிபந்தனைகளுக்குட்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் முதன்மை அனுமதி பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ளும் காலம் வரை பணி உத்தரவினை நீட்டிப்பு செய்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 21) | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் கொசுப்புழு உற்பத்தியாவதை தடுக்கும் பணிக்கு 63 பணியாளர்களை வழங்கி வரும் M/s. Relyon Facility Service Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண்.3963/2018/எச்1, நாள்.27.02.2020-இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 29.02.2020 முதல் பணியை துவங்கி பணி செய்து கடந்த 28.02.2021 உடன் ஒப்பந்தம் முடிவடைந்து சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரது அறிவுரையின்படி, திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள தேவையான நபர்களுக்கான அளவுகோல் நிர்ணயம் செய்ய முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டு நிர்வாக அனுமதி எதிர்பார்க்கப்படும் நிலையிலும், தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்த காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்கு சிறிது காலமாகுமென்பதாலும், பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது M/s. Relyon Facility Service Pvt Ltd, Chennai நிறுவனத்துடன் 31.05.2022 முடிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டுள்ளது. தற்போது வரை சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரது |

| | |
|---|---|
| | நிர்வாக அனுமதி பெறப்படாததாலும், பொது சுகாதார நலன் கருதி 01.06.2022 முதல் ஓராண்டிற்கு காலநீட்டிப்பு செய்து வழங்கலாம். ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும், உத்தேச செலவினத் தொகை ரூ.6.00 இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : பொது சுகாதார நலன் கருதி பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது பணியாளர்களை வழங்கி வரும் M/s. Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை 01.06.2022 முதல் ஓராண்டு காலத்திற்கு கால நீடிப்பு செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>(ந.க.எண்.3963/2018/எச்1) |
| 22) | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 11 வார்டுகளில் துப்புரவு பணி மேற்கொள்வதற்கு 76 பணியாளர்களை வழங்கி வரும் M/s. Relyon Facility Service Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண்.4468/2018/எச்1, நாள்.27.02.2020-இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 29.02.2020 முதல் பணியை துவங்கி பணி செய்து கடந்த 28.02.2021 உடன் ஒப்பந்தம் முடிவடைந்து சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரது அறிவுரையின்படி, திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள தேவையான நபர்களுக்கான அளவுகோல் நிர்ணயம் செய்ய முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டு நிர்வாக அனுமதி எதிர்பார்க்கப்படும் நிலையிலும், தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்த காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்கு சிறிது காலமாகுமென்பதாலும், பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது M/s. Relyon Facility Service Pvt Ltd, Chennai நிறுவனத்துடன் 31.05.2022 முடிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டுள்ளது. தற்போது வரை சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரது நிர்வாக அனுமதி பெறப்படாததாலும், பொது சுகாதார நலன் கருதி 01.06.2022 முதல் 30.06.2022 வரை காலநீட்டிப்பு செய்து வழங்கலாம். ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும், உத்தேச செலவினத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : பொது சுகாதார நலன் கருதி துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியாளர்களை வழங்கி வரும் M/s. Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை 01.06.2022 முதல் 30.06.2022 வரையில் கால நீடிப்பு செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>(ந.க.எண்.4468/2018/எச்1) |
| 23) | இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.3, உலகத்தேவர் 6வது தெருவில் பழுதடைந்த நிலையில் இருந்து வந்த நகராட்சி சமுதாயக் கூடத்தினை உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டம் 2020-2021-இன்கீழ் பழுது பராமரிப்பு பணிகள் செய்து முடித்து புதுப்பிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இச்சமுதாயக் கூடத்தினை பொது ஏலம் விடுவதற்கும் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்ட வைப்புத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>பொது ஏல முன்வைப்புத்தொகை ரூ. 100000/-<br>பொது ஏல பொறுப்புத்தொகை ரூ. 50000/- |
| | அலுவலகக்குறிப்பு : பொதுஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.979/2021/பி2) |
| 24) | இந்நகராட்சியில் வார்டு எண்.30, சின்ன வாய்க்கால் ரோடு 2வது மற்றும் 3வது குறுக்கு சந்தில் குடியிருப்பு விரிவாக்க பகுதி என்பதால் குடியிருப்புகளுக்கு வீட்டு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க பகிர்மான குழாய் இல்லாததால் வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க இயலாத நிலை உள்ளது. எனவே, மேற்படி பகுதியில் பொது மக்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் பொருட்டு 900mm PVC பகிர்மான குழாய் அமைக்க உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.85,000/- குடிநீர் நிதி 2022-2023-இன்கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு :<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதி 2022-2023-இன்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1123/2022/இ2) |

25) இந்நகராட்சியில் கீழ்கண்ட பணிகள் செய்திட 08.06.2022-ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒவ்வொரு பணிகளுக்கும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வீதம் வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட | |
|---|---|---|---|---|---|
| | | | | சதவீதம் குறைவு | சதவீதம் கூடுதல் |
| 1 | இந்நகராட்சியில் வார்டு எண்.7, சுவாமி விவேகானந்தர் குறுக்கு தெருவில் 90 எம்.எம் பி.வி.சி பகிர்மான குழாய் பதிக்கும் பணிகள் செய்தல். | 75,000/- | M.வேல்பாண்டியன் | 0.40 | |
| | | | A.P. கன்ஸ்ட்ரக்சன் | | 1.97 |
| 2 | முகைதீன் ஆண்டவர்புரம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மும்முனை மின் இணைப்பு பெற தேவையான பணிகள் மேற்கொள்தல் | 75,000/- | M.வேல்பாண்டியன் | 0.30 | |
| | | | A.P. கன்ஸ்ட்ரக்சன் | | 0.15 |
| 3 | இந்நகராட்சி ஆணையாளர் குடியிருப்பில் தடையில்லா மின் வழங்கி பொருத்த தேவையான மின் கலப்பெட்டி மற்றும் இன்வெர்டர் சப்ளை செய்தல் (UPS 1100W Battery 150Ah/12V) | 22,000/- | M/s. A.M.R Battery Shop, Cumbum | 0.06 | |
| | | | M/s. Durga Batteries, Cumbum | 0.12 | |

அலுவலகக்குறிப்பு :
வரப்பட்ட 3 பணிகளுக்கான இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட, விலை விகிதம் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

26) இந்நகராட்சி லோயர் கேம்ப் குடிநீர் திட்டம் ரூ.18.80 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் செயல்படுத்தி பணிகள் முடித்து நகராட்சி வசம் 17.04.2020-ஆம் தேதி முதல் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்படி திட்டத்தை நகராட்சி மூலம் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாததால் வருடாந்திர ஒப்பந்த அடிப்படையில் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட ரூ.44.00 இலட்சம் மதிப்பீட்டில் உரிய மன்ற அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறிப்பிட்டுள்ள எல்.ராஜேந்திரன் என்பவருக்கு இவ்வலுவலக ந.க.எண்.1136/2020/இ2, நாள்.01.12.2020-ஆம் தேதியிட்ட செயல்முறை ஆணையில் 01.12.2020 முதல் 30.11.2021 முடிய லோயர் கேம்ப் குடிநீர் திட்டத்தை இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட அனுமதித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.29156/2019/DO2. நாள்.22.10.2020-ஆம் தேதிய கடிதத்தில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் செய்திட ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் செயல்பாடுகளில் குறைபாடுகள் ஏதுமில்லாத நிலையில் தொடர்ந்து நீட்டித்து கொள்ளலாம் என அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கோரப்பட்டு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும் வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாதவகையிலும், ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதியின்படி, தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.எல். இராஜேந்திரன் என்பவர்

| | |
|---|---|
| | தொடர்ந்து 1 மாத காலத்திற்கு 01.06.2022 முதல் 30.06.2022 வரை பணிகள் மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச மதிப்பீடு கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும் ESI, EPF, G.S.T உட்பட தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| வ.எண். | பணியாளர் விவரம் | மாதம் மொத்த பணியாளர் | 1 நபருக்கு நாள் ஒன்றுக்கான ஊதியம் | மாத மொத்த ஊதியம் |
|---|---|---|---|---|
| 1 | மின் பணியாளர் 3 நபர் | 30 x 3 = 90 | 636 | 57240 |
| 2 | படுகை வடிகட்டி இயக்குநர் (Fitter bed Operator) 3 நபர் | 30 x 3 = 90 | 713.70 | 64233 |
| 3 | காவலர் 12 நபர் | 30 x 12 = 360 | 385 | 138600 |
| | | | மொத்தம் | 260073 |

**அலுவலகக்குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2022-2023-இன் கீழ மேற்கொள்ளவும் மன்றம்அனுமதிக்கலாம். (ந.க.எண்.1136/2020/இ2)

27) **இந்நகராட்சியில் நீண்ட காலமாக நிலவி வந்த பொது மக்களின் குடிநீர் பற்றாக்குறையை போக்க நகராட்சிக்கென தனி கூடுதல் குடிநீர் திட்டம் சுருளிப்பட்டி ரோடு முல்லையாற்றில் உறைகிணறு அமைத்து** 23.09.2014 **முதல் நகர மக்களுக்கு குடிநீர் குறைவின்றி பம்பிங் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் திட்டத்தில் உள்ள** 8 **மின் விசை மோட்டார்களை உரிய தொழில் நுட்ப பணியாளர்களை கொண்டு இயக்குதல் பணிகளை செய்திட** 2022-2023-**ஆம் ஆண்டிற்கான வருடாந்திர ஒப்பந்த பணிக்காலம்** 31.05.2022-**இல் முடியும் நிலையில் தற்போது குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கோரப்பட்டு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும்வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாத வகையிலும், ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதியின்படி, தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.எல்.இராஜேந்திரன் என்பவர் தொடர்ந்து** 1 **மாத காலத்திற்கு** 01.06.2022 **முதல்** 30.06.2022 **வரை பணிகள் மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச மதிப்பீடு கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும்** ESI, EPF, G.S.T உட்பட தொகை ரூ.77,000/-க்கு (ரூபாய் எழுபத்தி ஏழாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் விவரம் | மாதம் மொத்த பணியாளர் | 1 நபருக்கு நாள் ஒன்றுக்கான ஊதியம் | மாத மொத்த ஊதியம் |
|---|---|---|---|---|
| 1 | மின் பணியாளர் 3 நபர் | 30 x 3 = 90 | 568 | 51120 |
| 2 | காவலர் 1 நபர் | 30 x 1 = 30 | 426 | 12780 |
| | | | மொத்தம் | 63900 |

**அலுவலகக்குறிப்பு**:

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2022-2023-இன் கீழ மேற்கொள்ளவும் மன்றம்அனுமதிக்கலாம். (ந.க.எண்.579/2021/இ2)

| | |
|---|---|
| 28) | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TN 60AW 8347 எண் கொண்ட TATA ACE - வாகனத்தில் தொட்டி பிளாட் பாரம், ரேடியேட்டர், ஜாயிண்ட் ஸ்டார் 1, ஹைட்ராலிக் கேஸ் 1 பழுதாகி உள்ளது. எனவே மேற்காணும் பழுதினை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.40,000/-ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு:<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்காணும் வாகனத்தின் பழுது பணி செய்வதற்கு உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களில் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.40,000/-க்கு (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) மன்றம் அனுமதிக்கும், மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1165/2022/எச்1) |
| 29) | நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் தலைமையில் 21.02.2018 மற்றும் SBM திட்டம் SHPC கூட்ட நடவடிக்கைகளில் அனுமதியத்துள்ளதன்படி, கம்பம் நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 12 முடிய உள்ள வார்டுகள் மற்றும் வாரச்சந்தையில் உற்பத்தியாகும் மக்கும் கழிவுகளை அந்தந்த இடங்களிலேயே பிரித்து உரம் தயார் செய்திட நுண்உர செயலாக்க மையம் அமைத்திடவும், இதர உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளவும், இந்நகர்மன்ற தீர்மான எண்.1563 நாள்.13.08.2018-இன்படி பணிகள் மேற்கொள்ள கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.22866/2018/பி3, நாள்.23.08.2018 உத்தரவின்படியும், மதுரை நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி கடிதம் ந.க.எண்.756/2018/பி2, நாள்.24.08.2018-இன்படியும் கம்பம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2018-2019-இன்கீழ், கம்பம் நகராட்சிக்குட்பட்ட வாரச்ச்சந்தையில் நுண்உரம் செயலாக்க மையம் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி ரூ.47.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்திட அனுமதி வழங்கப்பட்டதின் பேரில், 10.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 28.09.2018 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மேற்காணும் பணி துவங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வந்த நிலையில், அப்பகுதி மக்களால் ஆட்சேபனை தெரிவித்து பணிகள் நடைபெறவிடாமல் தடுத்து வந்த நிலையில், மேற்காணும் பகுதி மக்களை சந்தித்து நகர்மன்றத்தலைவர், நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோர் பணி நடைபெறாமல் இருந்த இடத்தில் மக்களை நேரில் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதில் முன்னேற்றம் இல்லை. மேலும், மேற்காணும்<br>பேச்சு வார்த்தையில் பொதுமக்கள் நுண் உர செயலாக்க மையக்கட்டிடம் அமையவிருக்கும் விலை மதிப்புமிக்க இடமானது கம்பம் நகராட்சியின் மையப்பகுதியில் அமைந்துள்ளதால் மேற்காணும் இடமானது நகராட்சிக்கு வருவாய் ஈட்டி தரக்கூடியதாக இருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் கடந்த 18.06.2022 அன்று சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கம்பம் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளை நேரில் ஆய்வு செய்த போது, மேற்காணும் நுண்உர செயலாக்க மையம் அமைக்க பொது மக்கள் எதிர்ப்பு காரணமாக பணியினை தொடர இயலாமல் ஆட்சேபனை எழுப்பப்பட்ட விவரம் தெரிவிக்கப்பட்டது. எனவே, மேற்காணும் விலை மதிப்பு மிகுந்த நகரின் மையப்பகுதியில் நகராட்சிக்கு வருவாய் ஈட்டத்தக்க வகையில் மூலதன பணிகள் மேற்கொள்ள ஏதுவாக நுண் உர செயலாக்க மையம் அமைக்க வழங்கப்பட்ட நிர்வாக அனுமதியை ரத்து செய்து சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களை கேட்டுக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு :<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) வாரச்சந்தையில் நுண் உரம் செயலாக்க மையம் மற்றும் அமைக்கும் பணி செய்வதை ரத்து செய்யவும், மேற்காணும் இடத்தினை வருவாய் ஈட்டித்தரக்கூடிய வகையில் பணிகள் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம். |
| 30) | 2022-2023-ஆம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் கம்பம் நகராட்சிக்கு சொந்தமான தேரடி நகராட்சி ஆரம்ப பள்ளியில் பழுதடைந்த பழைய கட்டிடத்தினை அப்புறப்படுத்தி புதிதாக 2 வகுப்பறைகள் கட்டும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.30.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு:<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்காணும் செலவினத்தை 2022-2023-ஆம் ஆண்டு கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |

31) **கம்பம் நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையினை நவீன கட்டமைப்பு வசதிகளுடன் மேம்பாட்டு பணிகள் செய்வதற்கு மேற்காணும் இடத்தில் உள்ள** 140mm PVC Pipe **புதிதாக பதிப்பதற்கும்**, **உலகத்தேவர்** 5**வது தெருவில் பகிர்மான குழாய் பதிப்பதற்கும்**, **குரங்குமாயன் தெருவில் பெண்கள் விடுதி எதிர்புறம் பகிர்மான குழாய் பதிப்பதற்கும்**, **வார்டு எண்**.10 **சுப்பிரமணியசாமி கோவில் மற்றும் கம்பம் மெட்டு காலனி சந்திப்பு புதியதாக வால்வு பதிப்பதற்கும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ**.1,80,000/-**க்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது**.

**அலுவலகக்குறிப்பு**:
1)**மன்றம் அனுமதிக்கலாம்**.
2)**மேற்காணும் செலவினத்தை** 2022-2023-**ஆம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்**.

32) கம்பம் நகராட்சிக்கு தமிழ்நாடு சட்டமன்ற பேரவை நிதிநிலை அறிக்கை 2021-2022-ஆம் ஆண்டின் அறிக்கை எண்.14 மற்றும் அரசாணை எண் (MS) No.71 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.13.09.2021-இன்படியும், நமக்கு நாமே திட்டம் 2021-2022-இன்கீழ், கீழ்கண்ட பணிகள் செய்திட 18.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நந்தகோபாலன் கோவில் மேற்கு தெருவில் உள்ள நகராட்சி ஆலமரத்து பள்ளி கட்டிடத்தில் 4 வகுப்பறைகள் கட்டுதல் | 50,00 |

மேற்கண்ட பணிக்கு 18.05.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வலைதளம் வழியாக (Online) ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்படவில்லை. நேரடியாக (Offline) இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இதன் தொழில்நுட்ப பட்டியல் மட்டும் (Technical Bid) 19.05.2022 அன்று திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டது.

| Sl.No | Name of the Bidder | Responsive Details | Remarks |
|---|---|---|---|
| 1 | M/s. A.P. Constructions, Cumbum | Technically Qualified | No |
| 2 | Thiru.A. Sabeer Ali, Cumbum | Technically Qualified | No |

மேற்கண்ட இரண்டு தொழில்நுட்ப பட்டியலும் திட்டப்பணிகள் மேற்கொள்ள தகுதியானதாக இருந்த காரணத்தினால், தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமுனா (Price Bid) 19.05.2022 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில் வரப்பெற்ற விலைவிகிதம் விவரம் கீழ்கண்டவாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s. A.P. Constructions, Cumbum | மதிப்பீட்டு தொகைக்கு (+) 5.81 % அதிகம் |
| 2 | Thiru.A. Sabeer Ali, Cumbum | மதிப்பீட்டு தொகைக்கு (+) 13.54 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 5.81% கூடுதலாக M/s. A.P. Constructions, Cumbum நிறுவனத்தால் விலைவிகிதம் வழங்கிய நிலையில் விலைக்குறைப்பு செய்ய கோரியதில் ஒப்பந்த நிறுவனத்தால் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்திலிருந்து 4.90% மட்டுமே பணியினை மேற்கொள்ள இயலும் எனத் தெரிவித்து 24.05.2022-ஆம் தேதியில் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :
1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் , மதிப்பீட்டை விட 4.90% கூடுதலாக விலைவிகிதம் வழங்கியுள்ள M/s. A.P. Constructions, Cumbum ஒப்பந்தப்புள்ளியை மேற்படி திட்ட பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசியம் கருதி ஒப்பந்த நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட வரும் கூடுதல் செலவினத்திற்கு பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2191/2022/இ1)

| | |
|---|---|
| 33 | **<u>20வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. சபியாபானுஅப்துல்ஆசிக் அவர்களின் இரங்கல் தீர்மானம்</u>**<br>கம்பம் நகர்மன்றத்தில் சிறப்பாக மக்கள் பணியாற்றி மறைந்த, நகர்மன்ற உறுப்பினர்களுக்கு இரங்கல் தீர்மானம் |

| வ.எண். | பெயர் | பணியாற்றிய காலம் | இறந்த தேதி |
|---|---|---|---|
| 1 | M. பாலு<br>இரண்டு முறை 2வது வார்டு முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் | 2 முறை பணியாற்றியவர் | 26.06.2021 |
| 2 | M. அஜ்மல்கான்<br>மூன்று முறை 18வது வார்டு முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் | 3 முறை பணியாற்றியவர் | 25.07.2021 |
| 3 | N.S. தங்கராஜ்<br>இரண்டு முறை 21வது வார்டு முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் | 2 முறை பணியாற்றியவர் | 07.09.2021 |
| 4 | N. ஜீவானந்தம்,<br>இரண்டு முறை 20வது வார்டு முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் | 2 முறை பணியாற்றியவர் | 27.10.2021 |
| 5 | K. வாசு (என்ற) வாசகம்,<br>இரண்டு முறை 26வது வார்டு முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் | 2 முறை பணியாற்றியவர் | 03.07.2020 |

ஒப்பம்/- நெ.வனிதாநெப்போலியன்
நகர்மன்றத்தலைவர்
கம்பம் நகராட்சி.

இடம் :கம்பம்
நாள் : 24.06.2022